# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1993/31 - 2016 නොවැම්බර් මස 18 වැනි සිකුරාදා - 2016.11.18

1993/31 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக் கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

வட மாகாணத்தில், வவுனியா மாவட்டத்தில், வவுனியா பிரதேச செயலாளர் பிரிவில், தாண்டிக்குளம் (214ஏ) கிராம அலுவலர் பிரிவில் பத்தினியார்மகிழங்குளம் கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப் பட்ட 2014.12.14 திகதிய FVP No. 58 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் காட்டப்பட்ட 0.0092 ஹெக்டயார் விஸ்தீரண முடைய கீழ்க்காணும் எல்லைகளில் அமைந்துள்ள காணி.

**துண்டு இல. 290 - காணியின் பெயர்: ஓயார்சின்னக்குள இடம்; உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும்: செல்லையா விமலேஸ்வரன், இல. 03, R. D. D. அலுவலக விடுதி, பூங்கா வீதி, வவுனியா.**

வடக்கு: துண்டு 289; கிழக்கு: துண்டு 289; தெற்கு: துண்டுகள் 289, 29 (றோட் - பிரதேச சபை); மேற்கு: துண்டு 29, (றோட் - பிரதேச சபை), துண்டு 289.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரமளிக்கப் பட்ட காரியக்காரர் மூலமாக 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 28 ஆந் திகதி மு.ப. 9.00 மணிக்கு வவுனியா பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும், மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 21 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கா. உதயராஜா,
பிரதேச செயலாளர்,
வவுனியா.

பிரதேச செயலகம்,
வவுனியா,
2016, நவெம்பர் 07.

12 - 140


*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## திருத்தம்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது குறிப்பு இல.: AKU/ LAN/06/LA3726.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 2012/பல்லின
அறிவுறை/வீர்.

1994 யூன் மாதம் 03 ஆந் திகதிய 821/26 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிஸக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானிப் பத்திரிகையிலே பக்கம் 1 ஏ இல் 7 ஆம் பிரிவின் கீழ் நான் அறியத்தந்த நில அளவை மா அதிபரின் இறுதித் திட்ட வரைவு இல. 545, மேலதிக எண் 10, காணித் துண்டு இல. 424 எனக் காண்பிக்கப்பட்ட காணித் துண்டானது 324 என்றும், மற்றும் அதன் விஸ்தீரணமானது 1.6158 ஹெக்டயார் என்பது 1.6188 ஆக மீள்திருத்தப் பட்டதென்பதை இத்தால் அறியத்தருகின்றேன். மேலதிக விபரம் 1994.06.03 ஆம் திகதிய 821/26 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஓ. வி. சந்தன திலகரத்ன,
பிரதேச செயலாளர்,
அக்குறெஸ்ஸ.

பிரதேச செயலகம்,
அக்குறெஸ்ஸ,
2016, நவெம்பர் 01.

12 - 153